இணைப்பு I .

280 ஆம் பக்கத்தில் 261-ம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினவின் விடையைக் காண்க.]

புதுடில்லி, இந்திய அரசின் பாசன-மின் சக்தித்துறை அமைச்சகத்தின் 12—6—1972-ம் நாளிட்ட தீர்மானத்தின் நகல்.

தீர்மானம்.

1972-ஆம் ஆண்டு மே திங்கள் 29-ஆம் நாள் நடைபெற்ற மாநிலங்களுக்கிடையேயான கூட்டத்தில் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. காவிரி நீர்த் தகராறில் இணக்கமான தீர்வு ஏற்படுவதற்கு முதல் நடவடிக்கையாக புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கு ஒரு தகவல் அறியும் குழு நியமிக்கப்பட வேண்டுமென்றும், அப்புள்ளி விவரங்களைப் பயன்படுத்திக்கொண்டு முதலமைச்சர்களுக்கிடையில் மேற்கொண்டு விவாதம் நடத்தப்பட வேண்டும் என்றும் அக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

2. எனவே, கீழ்க்கண்டவர்கள் அடங்கிய தகவல் அறியும் குழுவை அமைக்க இந்திய அரசு முடிவு செய்தது :—

(1) திரு. P.R. அஹீஜா— ஓய்வு பெற்ற ஆணையாளர் (சிந்து) இணைச் செயலாளர், பாசன-மின்சக்தித்துறை அமைச்சகம்.

(2) திரு. ஜதிந்திரசிங்— ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர் பஞ்சாப்.

(3) டாக்டர் J.S, பட்டேல்— ஓய்வு பெற்ற வேளாண்மைத்துறை ஆணையாளர், உணவு—வேளாண்மை அமைச்சகம்.

(4) ஒரு நீதிபதி— நீதிபதி ஒருவர் கிடைத்தால் அவரும் இக்குழுவில் இடம் பெறுவார்.

3. கீழ்க்கண்ட பொருள்கள் இக்குழுவின் ஆய்வு வரம்பாக இருக்கும் :—

(1) காவிரி நீர் தொடர்பான புள்ளிவிவரங்கள் அனைத்தையும் சேகரித்தல் ; பல்வேறு காலங்களில் நீர் பயன்படுத்தப்படும் விதம் ; பாசன நடைமுறைகள் ; காவிரிப்படுகையில் தற்போது இருக்கும் திட்டங்கள், கட்டப்

[1972 ஆகஸ்ட் 25

பட்டுவரும் திட்டங்கள், கட்டக் கருதியுள்ள திட்டங்கள் பற்றிய புள்ளி விவரங்கள் சேகரித்தல்.

(2) பாசனக் காயங்களுக்காக தற்போது வழங்கப்பட்டு வரும் நீர் போதுமானதா அல்லது நீர் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றதா என்பது குறித்து ஆராய்தல்.

(3) பல்வேறு மாநிலங்களில் நீர் பயன்படுத்துவதற்கு வசதியாக பௌதிகக் கூறுகள், பிற கூறுகளைக் குறித்த புள்ளி விவரங்களைச் சேகரித்தல்; பயிரிடப்படும் பகுதிகள்; வீட்டுக் காரியங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் தற்போது நீர் பயன்படுத்தப்படும் அளவு; நீர் வழங்கக் கருதியுள்ள அளவு; புனல் மின்சக்தி உற்பத்தி; கால்வாய் போக்குவரத்து; உப்பு நீர்க்கட்டுப்பாடு; பாசனமல்லாத பிற காரியங்கள் குறித்து புள்ளி விவரங்களைச் சேகரித்தல்.

(4) இது தொடர்பான பிற பொருள்கள்.

4. 1972 ஜுன் 15-ம் நாள் முதல் இக்குழு தன் பணியைத் தொடங்கும். இக்குழு 1972, செப்டம்பர் 15-ம் நாளுக்குள் தனது அறிக்கையை இந்திய அரசின் பாசன-மின்சக்தித்துறை அமைச்சகத்துக்கு பணிந்தனுப்பும்.

(புதுடில்லி இந்திய அரசின் பாசன-மின் சக்தித்துறை அமைச்சகத்தின் 29—7—1972-ம் நாளிட்ட தீர்மானத்தின் நகல்.)

தீர்மானம்.

காவிரி நீர் குறித்து தகவல் அறியும் குழு ஒன்றை அமைக்க இந்த அமைச்சகத்தின் 1972, ஜுன் 12-ஆம் நாளிட்ட 14/72-16- W.D. ஆம் எண்ணுள்ள தீர்மானத்தையொட்டி பம்பாய் உயர்நீதி மன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியான திரு. பி. டி. பால்(B.D. Bal) அவர்களை இக்குழுவின் நீதிபதி உறுப்பினராக இந்திய அரசு நியமித்துள்ளது.

இணைப்பு II.

297 ஆம் பக்கத்திலுள்ள 44-ம் எண்ணுள்ள உடுக்குறியிடப்படாத வினாவின் விடையைக் காண்க.]

(அ) ஐம்பத்தேழு சதம். தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படும் பரப்பு 60.83 லட்சம் ஹெக்டேர். மொத்த சாகுபடி நில்த்தில் புஞ்சை சாகுபடி நிலத்தின் சதவீதம் 57.